FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS) (பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)
(Under Section 154 Cr.P.C.) (கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101934

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 03/2026 Date: நாள் 10.06.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 04.06.2026 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30 hrs Time to : நேரம் வரை 22.45 hrs
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.06.2026 Time : நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.06.2026 Time : நேரம் 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் விருதுநகர் மாவட்ட பதிவாளர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் சுமார் 5 கி.மீ வடக்கு.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.சி.லட்சம்
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் திரு.சின்னஇருளாண்டி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 07.03.1976
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர்/ மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர்
(g) Address : முகவரி தனி வட்டாட்சியர், குடிமை பொருள் வழங்கல், விருதுநகர் தாலுகா, விருதுநகர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.திருமதி.ஜன்னத்துல் பிர்தௌஸ், சார்பதிவாளர், எண்.2 இணைசார்பதிவகம், விருதுநகர் மாவட்ட பதிவாளர் அலுவலக வளாகம், விருதுநகர் மற்றும் தனிநபர்கள் 2) திரு.சுரேந்திரன், 3) ஹரிகிருஷ்ணன், 4) ஈஸ்வரன், 5) பெருமாள்சாமி, 6)திரு.ஜாவித் அகமது கபீர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (ஷே.ஜாஸ்மின் மும்தாஜ், காவல் ஆய்வாளர்) 05.06.2026 அன்று காலை 10.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.லட்சம் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும், அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 04.06.2026, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.54,000/-, மற்றும் கைப்பற்றப்பட்ட சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றையும் சேர்த்து திருமதி.ஜன்னத்துல் பிர்தௌஸ், சார்பதிவாளர், எண்.2 இணைசார்பதிவகம், விருதுநகர் மாவட்ட பதிவாளர் அலுவலக வளாகம், விருதுநகர் மற்றும் தனிநபர்களான 1) திரு.சுரேந்திரன், 2) ஹரிகிருஷ்ணன், 3) ஈஸ்வரன், 4) பெருமாள்சாமி, 5)திரு.ஜாவித் அகமது கபீர் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10.6.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. JASMINE MUMTAJ
Rank: நிலை INSPR. / No.எண் C.1/VNR.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.03/2026 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

அனுப்புநர் திரு.சி.லட்சம், (50/2026), த/பெ.சின்ன இருளாண்டி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (குடிமைபொருள் வழங்கல்), விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர்.அய்யா, பொருள் : விருதுநகர் மாவட்டம் - பதிவுத்துறை - எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம் - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டியது - தொடர்பாக. நான் தற்போது விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, குடிமை பொருள் வழங்கல், தனி வட்டாட்சியராக 27.05.2026 அன்று முதல் பணிபுரிந்து வருகிறேன். விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 03.06.2026ஆம் தேதி முதல் விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று (04.06.2026) பிற்பகல் சுமார் 02.30 மணியளவில் விருதுநகர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள தனிவட்டாட்சியர் (குடிமைப்பொருள் வழங்கல்) அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்டம், விருதுநகர் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருபவர், அவருடைய அலுவலகத்தில் அவருக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்கள், பத்திர எழுத்தர்கள், பத்திர எழுத்தர்கள் அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் (சாட்சி கையெழுத்து போடுபவர்கள்) மூலம் அன்றன்று பதிவாகும் பத்திரப்பதிவுகளுக்கு கையூட்டு பணம் பெறுவதாக நம்பகமான தகவலின் அடிப்படையில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்பேரில், நான் நேற்று (04.06.2026) பிற்பகல் 03.00 மணிக்கு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ஷே.ஜாஸ்மின் மும்தாஜ் மற்றும் அவர்களது குழுவினருடன் நேற்று (04.06.2026) பிற்பகல் சுமார் 03.15 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு, விருதுநகர் - மதுரை ரோட்டின் மேற்குபக்கம் அமைந்துள்ள விருதுநகர் மாவட்ட பதிவாளர் அலுவலக வளாகத்திற்குள் அமைந்துள்ள விருதுநகர் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பிற்பகல் சுமார் 03.30 மணியளவில் சென்று இரவு 10.45 மணிவரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த தனிநபர்கள் திரு.சுரேந்திரன் என்பவர் வைத்திருந்த ரூ.6,000/-, திரு.ஹரிகிருஷ்ணன் என்பவர் வைத்திருந்த ரூ.8,000/-, திரு.ஈஸ்வரன் என்பவர் வைத்திருந்த

ரூ.25,000/-, திரு.பெருமாள்சாமி என்பவர் வைத்திருந்த ரூ.10,000/-, திரு.ஜாவித் அகமது கபீர் என்பவர் வைத்திருந்த ரூ.5,000/- ஆகியவை அவர்களால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் எனவும், விருதுநகர் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திருமதி.ஜன்னத்துல் பிர்தௌஸ் என்பவருக்கு பத்திரப்பதிவு செய்து கொடுப்பதற்காக கொண்டு வந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் எனவும் கருதி கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக நேற்று (04.06.2026) பிற்பகல் 03.30 மணி முதல் இரவு 10.45 மணி வரை ஒரு செயல்முறை நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டது.

மேற்படி தனிநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த ரூ.54,000/- பணமும் அவர்களால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் என்றும், விருதுநகர் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் திருமதி.ஜன்னத்துல் பிர்தௌஸ் என்பவருக்கு பத்திரப்பதிவு செய்து கொடுப்பதற்காக கொண்டு வந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என்றும் தெரியவந்ததால், திருமதி.ஜன்னத்துல் பிர்தௌஸ், சார்பதிவாளர், எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் மற்றும் தனிநபர்களான திரு.சுரேந்திரன், திரு.ஹரிகிருஷ்ணன், திரு.ஈஸ்வரன், திரு.பெருமாள்சாமி மற்றும் திரு.ஜாவித் அகமது கபீர் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 04.06.2026, கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.54,000/-, 1)கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட Year 2026 Month June Account A Virudhuangar Joint II Date From:04-Jun-2026 To:04-Jun-2026 என ஆவண எண்.1/3559/2026 முதல் 1/3592/2026 வரையிலான ஆவணம், 2)விருதுநகர் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலக தொகுதி-26 வருகைப்பதிவேடு ஜூன் 2026, 3)விருதுநகர் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலக பணியாளர் வருகைப்பதிவேடு ஜூன் 2026, 4)01.01.2026 முதல் 31.12.2026 வரையிலான இயக்கப்பதிவேடு, 5)01.01.2026 முதல் 31.12.2026 வரையிலான தற்செயல் விடுப்பு மற்றும் ஈடுசெய்யும் விடுப்பு பதிவேடு, 6)நிரந்தர கணக்கு பதிவேடு, 7)01.01.2026 முதல் 31.12.2026 வரையிலான தனிநபர் பண இருப்பு பதிவேடு மற்றும் 8)H கணக்கு பதிவேடு ஆகிய ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள் ஆகியவற்றையும் சமர்ப்பிக்கிறேன் (sd) சி.லட்சம் (05.06.26) (சி.லட்சம்), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (குடிமை பொருள் வழங்கல்), விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். Sir, Received the complaint on 05.06.2026 at 10.00 hrs, As per the instruction of the Directorate of Vigilance and Anti-Corruption higher officials, I have registered a case in Viruthunagar V&AC Cr.No.03/2026 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on

10.06.2026 at 17.00 hrs (Sd) ஷே.ஜாஸ்மீன்மும்தாஜ் 10/06/26 (S.Jasmine Mumtaj), Inspector of Police, V&AC, VNR.

The original FIR along with original complaint, Joint Surprise Check Proceedings are submitted to the court of the Principal District and Session Judge cum Special Judge for P.C. Act cases, Virudhunagar at Srivilliputhur and copies submitted to the concerned officers.

10/6/26.
Inspector of Police
V&AC/VNR.